# மோத்தி என்கிற முத்து

*வெ. இறையன்பு* I.A.S

ஒருநாள் ஜெயகாந்தன் அவர்கள் என்னிடம் பேசும்போது, நான் இங்கர்சாலுடைய புத்தகங்கள் அதிகம் தமிழ்நாட்டில் வாசிக்கக் கிடைப்பதில்லை என்று ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கூறியதாகவும், அதைக் கேட்டு அவருடைய நண்பர் இங்கர்சாலுடைய புத்தகத்தை அனுப்பி வைக்க விரும்பியதாகவும் தெரிவித்தார். அப்படி இங்கர்சாலின் அரிய நூலின் மூலமாக அறிமுகமானவர்தான் திரு.மோத்தி எஸ்.ராஜகோபால்.

மதுரையில் பணியாற்றியபோது திரு.மோத்தி எஸ்.ராஜகோபால் அவர்களை நேரில் சந்திக்க நேர்ந்தது. படிப்பதில் அவருக்கு இருந்த தீராத தாகம் அவர் பேச ஆரம்பித்த ஒரு சில நிமிடங்களிலேயே உணரும் படியாக இருந்தது. அவரைப் பொறுத்தவரை வாசிப்பது ஒரு வேள்வி. எந்த பிரதிபலனும் இல்லாமல் வாசிக்கிற சுகத்திற்காகவே வாசிப்பவர் அவர். எந்த தலைப்பைப் பற்றியும் அவரால் பேச முடியும். ஆனால், தன்னுடைய மேதாவிலாசத்தை வெளிக்காட்ட ஒருபோதும் அவர் முயன்றதில்லை. அதற்காகவே, அவரை எனக்கு அதிகம் பிடித்திருந்தது. அதற்குப் பிறகே அவர் "ஜெய ஜெய சங்கரா" நூலைப் பதிப்பித்தவர் என்கிற விவரமெல்லாம் தெரிய ஆரம்பித்தது.

அவர் தனக்கு ஜெயகாந்தன் அவர்களிடம் இருந்த பரிச்சயம் பற்றி குறிப்பிடுவார். மற்றவர்களுக்குத் தெரியாத பல பரிமாணங்கள் அவருக்குத் தெரிந்திருந்தது. மதுரையின் ஓய்வு, அவரை நிறைய முறை சந்திக்க என்னை அனுமதித்தது. அவர் செயலராக இருந்த உருமு தனலெட்சுமி கல்லூரிக்குப் பேச என்னை அழைத்திருந்தார். அப்போது அவர் வீட்டில் மதிய உணவு அருந்தினோம். உறுத்தாத உபசரிப்பு. மென்மையான அணுகுமுறை. பருப்புப் பொடியை ரசத்தில் கலந்து சாப்பிட அவருடைய வீட்டில்தான் கற்றுக்கொண்டேன். அன்று அவருடைய வாசிப்பு வாழ்வோடு தொடர்புடையது என்பதை நான் உணர்ந்தேன். என்னுடைய புத்தகங்கள் பெரும்பாலும் படித்தவற்றின் அடிப்படையில் இருப்பதாக அவர் கோடிட்டுக் காட்டுவதுண்டு. புனைவியல் படைப்பிலக்கியம் நம் அனுபவங்களை இன்னும் அதிகமாக வெளிப்படுத்தும் ஊடகமாகத் திகழும் என்று நான் நினைப்பதுண்டு. ஒருவகையில் என்னை படைப்பிலக்கியங்களை நோக்கித் திருப்பிவிட்ட மாற்றம் திரு. மோத்தி அவர்களால் நிகழ்ந்தது என்றே நான் நினைக்கிறேன்.

திருச்சியில் கூடுதல் பொறுப்பு வகித்த போது, நான் தங்கியிருந்த விருந்தினர் மாளிகைக்கு அவர் வருவார். நாங்கள் இருவரும் மதியஉணவைப் பகிர்ந்து கொண்டே பல செய்திகளைப் பறிமாறிக் கொள்வோம். அவருடைய ஆழமான வாசிப்பு திருச்சி மாநகர் முழுமைக்கும் தெரியும். என் சகோதரர் திருப்புகழ் அவரைப் பற்றி சிலாகித்துப் பேசியதுண்டு.

சென்னைக்கு வந்த பிறகு ஓரிரு முறைதான் அவரைச் சந்திக்க நேர்ந்தது. அதுவும் ஒரு சில நிமிடங்கள் மட்டுமே நிகழ்ந்த உரையாடல். என்னுடைய வாழ்க்கையே ஒரு வழிபாடு என்கிற நூல் தனக்கு மிகவும் பிடித்திருந்ததாகவும், பலருக்கு அதை வாங்கிப் பரிசளித்ததாகவும் அவர் கூறியபோது உண்மையிலேயே மகிழ்ந்தேன். அவ்வளவு சீக்கிரம் எதையும் அவர் பாராட்டி விடமாட்டார். அவரோடு அதிகம் பழக முடியாத நேர நெருக்கடி எனக்குச் சோர்வையே அளித்தது. வாழ்க்கையின் பரபரப்புகளில் நம் ஜீவ அடிநாதத்தைத் தொலைத்து விடுகிறோம் என்றே தோன்றுகிறது. திடீரென்று ஒருநாள் தொலைப்பேசியில் அழைத்து “உங்களுக்கு ஒரு புத்தகம் அனுப்பி வைக்கிறேன்” என்றார். இரண்டு நாட்களில் ஹெச்.ஜி. வெல்ஸ் புத்தகத்தை அனுப்பி வைத்தார். மறுவாரம் அவர் மறைந்த துயரச் செய்தி எனக்குக் கிடைத்தது.

மோத்தியைப் பார்க்கும் போதெல்லாம் ஒரு புத்தகம் நடந்து வருவது போலத்தான் எனக்குத் தோன்றும். சற்று கனமாகக் கலைக்களஞ்சியம் போல. இப்போதுகூட அவர் இருப்பது போன்ற உணர்வே ஏற்படுகிறது. பலர் இருக்கின்ற போதே இல்லாத உணர்வு ஏற்படுகிறபோது இல்லாத போதும் இருக்கின்ற உணர்வை உண்டாக்குவது மகத்தான சாதனைதானே!